# இலங்கையில் போருக்குப் பின்னரான இஸ்லாமிய எதிர்ப்பு சிந்தனையின் எழுச்சியும் அதன் தாக்கங்களும். The Rise of Islam phobia Concept and Its Impacts in Post War Sri Lanka

**M.Y. Mohamed Yoosuff Imran**
Department of Political Science
South Eastern University of Sri Lanka
mymy.imran@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்:**

இஸ்லாமோபியா எனப்படும் இஸ்லாமிய எதிர்ப்பு எனும் கருத்தியலானது மேற்கத்தேய நாடுகளில் பரவி வருகின்ற அல்லது இஸ்லாமிய அச்சத்தின் விளைவாக கட்டமைக்கப்பட்ட கருத்தியலாகக் காணப்படுகிறது. இஸ்லாமிய உலகிலும் மேற்கத்தேய நாடுகளிலும் ஏற்பட்டிருக்கும் நவீன இஸ்லாமிய எழுச்சியின் வேகமான அலைகள் உலக மக்களை அதனை நோக்கி திரும்பி பார்க்க வைத்துள்ளன. குறிப்பாக மேற்குலகில் மிக வேகமாகஇஸ்லாம் பரவி வருவதன் விளைவாக கிறிஸ்தவ பாதிரிமார்களும், மேற்குலகின் சில அறிஞர்களும் இஸ்லாம் குறித்துப் போலியான தகவல்களை முன்வைப்பதோடு முஸ்லிம்களை கொடூரமானவர்களாகவும், பயங்கரவாதிகளாகவும் காட்ட முனைந்து வருவதைக் காணக்கூடியதாக உள்ளது. இவ்வாறான செயற்பாடுகளினால் இஸ்லாமோபியா எனப்படும் இஸ்லாமிய எதிர்ப்பு எனும் கருத்தியலானது மேற்குலகினால் கட்டமைக்கப்பட்டு வருகின்றது. இன்று இக்கருத்தியலானது மேற்குலகில் மட்டுமன்றி இலங்கையிலும் இதன் தாக்கம் வெளிப்படுத்தப்பட்டு வருகின்றது. அதாவது இலங்கையில் மூன்று தசாப்த கால போருக்குப் பின்னர் இன, மத வாத சிங்கள பௌத்த கடும் போக்கு சக்திகள் இலங்கை முஸ்லிம் சமூகத்தை உளவியல் ரீதியில் பலவீனப்படுத்தி தாம் அடையத் துடிக்கும் இலக்குகளை எட்டிவிட இஸ்லாமிய எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றமை இலங்கையிலும் இஸ்லாமிய எதிர்ப்பு தீவிரமாக பரவி வருகின்றமையை பிரதிபலிப்பதாக சுட்டிக்காட்டப்படுகின்றது. எனவே இதனை மையப்படுத்தியதாக ஆய்வுப்பிரச்சினை காணப்படுகின்றது. இதற்கமைய இவ்வாய்வானது இலங்கையில் போருக்குப் பின்னரான இஸ்லாமோபியா சிந்தனையும் அதன் தாக்கத்தினையும் கண்டறிவதனை நோக்கமாகக் கொண்டுள்ளது. இதனை மேற்கொண்டு செயற்படுவதற்கு இச்சிந்தனையின் தாக்கத்தினை அடையாளம் காணுவதினையும்இவ்வாய்வுக்கு இரண்டாம் நிலைத் தரவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளதோடு பண்பு சார் பகுப்பாய்வுகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதுடன் விவரணப் பகுப்பாய்வாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. விவரணப் பகுப்பாய்வின் மூலமாக சிங்கள பௌத்த கடும் போக்கு சக்திகளினால் இலங்கையில் இஸ்லாமோபியா அச்சத்தின் வெளிப்பாடு மற்றும் அதன் மூலமாக ஏற்பட்ட தாக்கங்களாக கடும் பௌத்த தேசிய இயக்கங்களின் தோற்றம், இன நல்லிணக்கம் பாதிப்படைந்தமை, ஆட்சி மாற்றம் ஏற்பட்டமை, முஸ்லிம்களின் மதஸ்தலங்கள் தாக்கப்படுகின்றமை, முஸ்லிம்களின் கலாசாரம் மற்றும் பாதிப்படைந்தமை மற்றும் சர்வதேச பயங்கரவாத குழுக்களுடன் தொடர்புபடுத்துகின்றமை என்பன இனங்காணப்பட்டுள்ளன.

***Keywords:*** *Post war violence. Islamophobia, Muslims of Sri Lanka, Buddhist Hegemony*

## அறிமுகம்

மேற்கத்தேய நாடுகளில் பரவி வருகின்ற அல்லது கட்டமைக்கப்படுகின்ற இஸ்லாமிய அச்சத்தின் விளைவாக இஸ்லாமோபியா எனும் இஸ்லாமிய எதிர்ப்பு கருத்தியலானது காணப்படுகிறது. மோபியா என்ற பதமானது எதிர்ப்பு, பீதி, அச்சம், நோய், பயம் முதலிய கருத்துக்களைக் கொண்ட ஒரு கிரேக்க மொழிப் பதமாகும் (உண்மை உதயம்,ஜூலை. 2014, 45). 11.09.2001 அமெரிக்காவின் இரட்டைக் கோபுர தாக்குதலின் பின்னர் மேற்குலகில் உருவான ஓர் கருத்தியலாகவே இதனை அடையாளப்படுத்தக் கூடியதாக உள்ளது. இஸ்லாமிய

உலகிலும் மேற்கத்தேய நாடுகளிலும் ஏற்பட்டிருக்கும் நவீன இஸ்லாமிய எழுச்சியின் வேகமான அலைகள் உலக மக்களை அதனை நோக்கி திரும்பி பார்க்க வைத்துள்ளன. குறிப்பாக மேற்குலகில் மிக வேகமாக பரவி வருகின்ற மார்க்கமாக இஸ்லாம் காணப்படுகின்றது. இதனால் மேற்கத்தேய அறிஞர்களினால் இஸ்லாம் மதம் தொடர்பான தப்பபிப்பிராயம் காரணமாக இஸ்லாமோபியா எனும் கருத்தியலானது வெளியிடப்பட்டுள்ளது. இதனால் முஸ்லிம்களை மதத் தீவிரவாதிகளாகவும் இரக்கம், பண்பாடு என்பவற்றை அறியாத மனித சமூகத்திற்கு எதிரான சமத்துவம், மன்னிப்பு போன்ற மனித பண்புகளுக்கு விரோதமானவர்களாகவும் சித்தரிப்பதைக் குறிப்பிடுகின்றது. (உண்மை உதயம், ஜுலை. 2014, 46).

மேற்படி கருத்தின் பிரகாரம் இன்றைய பயங்கரவாத அமைப்புக்களாக அடையாளப்படுத்தப்பட்டிருக்கும் அல்-ஹைதா, தலிபான், ஐ.எஸ்.ஐ.எஸ் என்பன முஸ்லிம்களையே அடிப்படையாக கொண்டிருத்தல் மற்றும் ஜிஹாத் அமைப்புக்கள் என்பன தீவிரவாத செயற்பாடுகளில் ஈடுபடுதல், இஸ்லாமிய நாடுகளில் குற்றம் இழைத்தவர்களுக்கு எதிராக வழங்கப்படும் தண்டனைகளான மரண தண்டனை, கை வெட்டுதல் என்பன மனித பண்புகளுக்கு விரோதமானது என சுட்டிக் காட்டப்படுகின்றது. இவ்வாறான கட்டமைப்பை மேற்கொள்வதன் மூலம் மேற்குமக்களின் உள்ளங்களில் இஸ்லாம் பற்றிய மோசமான விம்பங்கள் கட்டமைக்கப்படுகின்றது. முஸ்லிம்களின் உள்ளங்களில் மேற்கை வெல்ல முடியாது அதனுடன் போராட முடியாது, அது அசைக்க முடியாத சக்தி போன்றமையை உருவாக்குகின்றது.

இதனை மேற்கத்தேய நாடுகளினால் இஸ்லாமியர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் நவீன கால போர் முறை எனக் குறிப்பிடலாம். இந்நிலையில் தற்போது இலங்கையில் போருக்குப் பின்னரான காலப்பகுதியில் தோற்றம் பெற்ற பொதுபலசேனா, ராவண பலய, சிஹல உறுமய ஆகிய இனவாத, மதவாத சிங்கள பௌத்த கடும் போக்கு சக்திகள் இஸ்லாமோபியா கருத்தியலின் தாக்கம் இலங்கையில் காணப்படுகின்றது என குறிப்பிட்டு முஸ்லிம் நிறுவனங்கள் , முஸ்லிம்கள் மீது எந்த விதமான ஆதாரங்களும் இன்றி குற்றச்சாட்டுக்களை முன்வைத்து, அதனை தளமாக கொண்டு முஸ்லிம்களுக்கு எதிராக வன்முறைகளில் ஈடுபட்டு அடக்கி வைக்க முற்படுகின்றன (Aliff. SM., 2015).

**ஆய்வுப் பிரச்சினை**

இவ்வாய்வானது இலங்கையில் போருக்குப் பின்னர் பௌத்த தேசியவாத இயக்கங்களினால் முஸ்லிம்களுக்கெதிராக இழைக்கப்படுகின்ற வன்முறைக்கான காரணிகளில் ஒன்றாக இஸ்லாமிய எதிர்ப்பு சிந்தனை காணப்படுகின்றது. எனவே இதனை ஆய்வுப் பிரச்சினையாக கருதி இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**ஆய்வின் நோக்கம்**

போருக்குப் பின்னரான இலங்கையில் பௌத்த தேசியவாத இயக்கங்களினால் முஸ்லிம்களுக்கெதிராக இழைக்கப்படுகின்ற வன்முறைக்கான காரணிகளில் இஸ்லாமிய எதிர்ப்பு சிந்தனை மற்றும் அதன் தாக்கம் என்பன செல்வாக்குச் செலுத்துகின்றதா என்பதை இனங்காண்பதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

**ஆய்வு முறையியல்**

இது ஒரு சமூக விஞ்ஞான ஆய்வு என்ற வகையில் இங்கு பண்புசார் (Qualitative Research Method) முறையே அதிகம் பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாய்விற்காக

இரண்டாம் நிலைத் தரவுகள் (Secondary Data) ஆகிய மூலங்களிலிருந்து தரவுகள் பெறப்பட்டன. இரண்டாம் நிலைத் தரவுகளானது பத்திரிகைகள், அறிக்கைகள், சஞ்சிகைகள், இணையத்தளம் என்பவற்றின் மூலம் சேகரிக்கப்பட்டுள்ளன.

**பகுப்பாய்வும் முடிவுரையும்**

இவ்வாய்விற்கு பெறப்பட்ட தரவுகளினை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட விவரணப் பகுப்பாய்வின் மூலம் இலங்கையில் போருக்குப் பின்னரான காலப்பகுதியில் தோற்றம் பெற்ற பௌத்த கடும் போக்கு சக்திகள் முஸ்லிம் நிறுவனங்கள் மற்றும் முஸ்லிம்கள் மீது வன்முறைகளில் ஈடுபடுவதற்கான காரணங்களை ஆராய்கின்ற போது அது இஸ்லாம் ,முஸ்லிம்கள் மீதான அச்சத்தை வெளிப்படுத்துகின்றன.இஸ்லாமோபியா சிந்தனை அடிப்படையில் இஸ்லாமிய விஸ்தரிப்பினை எதிர்ப்பதாக அமையும். இச்சிந்தனை இலங்கையில் பின்வரும் காரணிகளினடிப்படையில் பௌத்த தேசிய வாத இயக்கங்களினால் நியாயப்படுத்தப்படுகின்றன.

- பொதுபல சேனா அமைப்பின் கூற்றின்படி சிங்களவர்கள் திராவிட சிங்களவர்கள் மற்றும் கத்தோலிக்க சிங்களவர்கள் எனவும் தமிழர்களில் இந்துக்கள் மற்றும் கத்தோலிக்க தமிழர்கள் என வேறுபாடு காணப்படுகின்ற நிலையில் முஸ்லிம்கள் தொடர்பில் இனரீதியில் எதுவித வேறுபாடு இல்லாது மத ரீதியாக அனைவரும் இஸ்லாமியர்களாகவும், முஸ்லிம்களாகவும் காணப்படுவது ஓர் அச்ச உணர்வை ஏற்படுத்தியுள்ளது (Jones, Robin Noel Badone, 2015, 5).

- ஆரம்ப காலங்களில் பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான், ஈரான், ஈராக், பாகிஸ்தான் மற்றும் மாலைதீவு என்பன பௌத்த நாடுகளாகவே காணப்பட்டன. ஆனால் தற்போது இந்த நாடுகள் இஸ்லாமிய நாடுகளாக மாறியுள்ளன. அதேபோன்று எதிர்காலத்தில் இலங்கையானது இஸ்லாமிய நாடாக மாறிவிடும்'' (Jones, Robin Noel Badone, 2015, 36).

- அக்மீமன தயாரத்ன தேரர் குறிப்பிடுகையில் ஆரம்பத்தில் முஸ்லிம் 7 ஆண்களே வருகை தந்துள்ளனர். அவர்கள் சிங்கள பெண்களை திருமணம் செய்த பின்னரே இலங்கையில் முஸ்லிம்களின் பரம்பரை உருவானது. எனவே முஸ்லிம்களின் மூதாதையர்கள் சிங்கள மக்களாகிய நாங்களே''(யசி, ஆர். (2014. ஜுன்.21).

- முஸ்லிம் கலாசார விழுமியங்களை பாதிக்கும் செயற்பாடுகளாக களுத்துரை மாவட்டத்தின் பேருவளை பிரதேச சபைக்கு உட்பட்ட பிரதேசமான தர்கா நகரில் மாடு அறுப்பதற்கு 02.03.2013 ம் அன்று எதிர்ப்பு தெரிவித்தமை, ஹலால் சான்றிதழ் உடனடியாக வாபஸ் பெறப்பட வேண்டும் என பாரிய ஆர்ப்பாட்டங்கள் செய்யப்பட்டு தடுத்து நிறுத்தியமை, ஷரீஅ சட்டங்களுக்கு இந்நாட்டில் இடமளிக்க முடியாது எனவும் இஸ்லாமிய வங்கி முறை, காதி நீதிமன்றம் முதலியவை அவசியமற்றது என பொதுபலசேனாவின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தமையைக் குறிப்பிடலாம் (திருமலை நவம், 2014, 4).

- மேலும் உலக நாடுகளின் பெயர்களை அவதானிக்கும் போது பெரும்பான்மை இன மக்களைக் குறிப்பதாகவே காணப்படுகின்றன. உதாரணமாக தாய் இனத்தை பெரும்பான்மை கொண்டதால் தாய்லாந்து எனவும், மலே இனத்தை

சேர்ந்தவர்கள் பெரும்பான்மையாக கொண்டமைந்ததால் மலேசியா என பெயர் வந்ததாகவும் குறிப்பிட்டு இலங்கையில் சிங்கள மக்களே பெரும்பான்மையாக இருப்பதால் இலங்கையினுடைய பெயரினை சின்ஹய என மாற்றப்பட வேண்டும் எனவும் நாட்டின் தேசியக் கொடியானது சிங்களவர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் சிங்கத்தை மட்டும் கொண்டிருக்க வேண்டும். தேசிய நிகழ்வுகளில் பௌத்தம் தான் மதமாக இருக்க வேண்டும். நாட்டின் சிறுபான்மையினர் தாம் விரும்பி தருவதை பெற்றுக் கொண்டு அடங்கியிருக்க வேண்டும் என்பது பொதுபலசேனா அமைப்பின் எதிர்பார்ப்பாக காணப்படுகின்றது (Center for Policy Alternative,2013)

- முஸ்லிம் வைத்தியர்கள் சிங்களவர்களின் இனப்பரம்பரையைக் குறைக்கும் வகையில் மகப்பேற்று நிலையில் சிங்கள பெண்களுக்கு சிசேரியன் சத்திர சிகிச்சையை மேற்கொள்வதாக விமல புத்தி தேரர் குற்றம் சுமத்துகின்றார். சிசேரியன் செய்வதன் மூலமாக அப்பெண்ணுக்கு இரண்டு அல்லது மூன்று குழந்தைகள் மாத்திரமே பெறுவதற்கான நிலையை உருவாக்குவதாக குறிப்பிடுகின்றார் ( Latheef Farook, (2014)

- இலங்கையில் அல்-ஹைதா, தலிபான் அமைப்புக்கள் செயற்படுதல் , நாட்டில் காணப்படும் மஸ்ஜித்கள் அனைத்தும் ஜிஹாத்திய பங்கர்கள் , ஷரீஆ சட்டத்தை அமுல்படுத்துவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படுதல், இஸ்லாமிய வங்கி முறை அறிமுகம் ,முஸ்லிம்களுக்கென்று விஷேடமான முஸ்லிம் தனியார் சட்டம் காணப்படுதல் தென்கிழக்கு பல்கலைக்கழகம் முஸ்லிம் தீவிரவாதிகளை உருவாக்கும் ஓர் நிறுவனம்,முஸ்லிம்களின் உணவகங்களில் இரசாயனங்களைக் கலந்து சிங்கள பௌத்தர்களை மலடர்களாக ஆக்கப்படுகின்றமை.

மேற்குறிப்பிட்ட குற்றச்சாட்டுக்கள் மற்றும் இஸ்லாமோபியா சிந்தனையின் வெளிப்பாடு என்பனவற்றின் மூலமாக இலங்கையில் போருக்குப் பின்னர் முஸ்லிம்கள் எதிர் நோக்கும் வன்முறைகளுக்கு காரணங்களாக அமைந்துள்ளதுடன் சிங்கள மற்றும் முஸ்லிம் உறவில் பாதிப்பினை ஏற்படுத்தியதுடன் உள்நாட்டில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. அந்தவகையில் உள்நாட்டில் ஏற்படுத்திய தாக்கங்களாக பின்வருவனவற்றை அடையாளப்படுத்தலாம்.

**கடும் பௌத்த தேசிய இயக்கங்களின் தோற்றம்**

இலங்கையில் போருக்குப் பின்னரான காலப்பகுதியில் பௌத்தம், சிங்கள மக்கள் மற்றும் இலங்கை நாடு ஆகியவற்றை பாதுகாக்கும் நோக்கில் தோற்றம் பெற்ற கடும் பௌத்த தேசிய இயக்கங்களான
பொதுபலசேனா, ராவண பலய, சிஹல உறுமய, தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் மற்றும் சிங்களே அமைப்பு என்பவற்றின் தோற்றம் என்பவற்றைக் குறிப்பிடலாம்.

**இன நல்லிணக்கம் பாதிப்படைந்தமை**

சிங்கள மற்றும் முஸ்லிம் மக்கள் மத்தியில் காணப்பட்ட இன நல்லிணக்கம் பாதிப்படைந்த ஒரு நிலையில் காணப்படுகின்றது. முஸ்லிம் மக்கள் சிங்களவர்கள் மீது ஓர் அச்ச உணர்வுடனும் சிங்கள மக்கள் முஸ்லிம்கள் மீது ஓர் வெறுப்புணர்வுடன் காணப்படக் கூடிய நிலையை தோற்றுவித்துள்ளதால் இவ்விரு சமூகங்களுக்கிடையில் நல்லிணக்கம் பாதிக்கப்பட்டதாகவே காணப்படுகின்றது.

**ஆட்சி மாற்றம் ஏற்பட்டமை**

மஹிந்த ராஜபக்ச அரசாங்கத்தில் இனவாதக் கட்சிகள், சிங்கள இனவாத சிந்தனை கொண்ட அமைப்புக்களின் செல்வாக்கு காணப்பட்டமை மற்றும் கடும் பௌத்த தேசியவாத இயக்கங்களை தடை செய்யாமை போன்ற காரணிகளினால் தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகங்கள் ஒன்றிணைந்து கடந்த ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க் கட்சிகளின் பொது வேட்பாளரான மைத்திரி பால சிறி சேனவை வெற்றி பெறச் செய்து ஆட்சி மாற்றதுக்கு வழி கோரியுள்ளனர்.

**முஸ்லிம்களின் மதஸ்தலங்கள் தாக்கப்படுகின்றமை.**

கடும் பௌத்த தேசிய இயக்கங்கள் பள்ளிவாசல் அழிப்பு, ஸியாரங்கள் உடைத்தல் ஆகிய செயற்பாடுகளில் ஈடுபட்டு வருவதைக் காணக்கூடியதாக உள்ளது. முஸ்லிம்களின் இதயமாகக் கருதப்படுகின்ற பள்ளிவாசல்களை நாசம் செய்யும் வகையில் தீவிரவாதத்திற்கு தீனி போடப்படுகிறது. அந்தவகையில் மாத்தளை கந்தர் பள்ளிவாசல், கேகாலை முகைதீன் ஜும்மா பள்ளிவாசல், இரத்தினபுரி முகைதீன் ஜும்மா பள்ளிவாசல் , கிராண்பாஸ் மேலவத்தையில் உள்ள தீனுல் இஸ்லாம் பள்ளிவாசல், தம்புள்ளை கைரியா ஜும்மா பள்ளிவாசல் தாக்கப்பட்டமை என்பவற்றைக் குறிப்பிடலாம்.

**முஸ்லிம்களின் கலாசாரம் பாதிப்படைந்தமை**

முஸ்லிம் கலாசார விழுமியங்களை பாதிக்கும் செயற்பாடுகளாக களுத்துரை மாவட்டத்தின் பேருவளை பிரதேச சபைக்கு உட்பட்ட தர்கா நகரில் மாடு அறுப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்தமை, ஹலால் சான்றிதழ் உடனடியாக வாபஸ் பெறப்பட வேண்டும் என பாரிய ஆர்ப்பாட்டங்கள் செய்யப்பட்டு தடுத்து நிறுத்தியமை, ஷரீஅ சட்டங்களுக்கு இந்நாட்டில் இடமளிக்க முடியாது எனவும் இஸ்லாமிய வங்கி முறை, காதி நீதிமன்றம் முதலியவை அவசியமற்றது என பொதுபலசேனாவின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தமையைக் குறிப்பிடலாம். மாத்தறை மாவட்டத்தின் நுபே பகுதியில் வகுப்புகளுக்கு சென்ற மாணவிகள் தாக்குதலுக்கு உள்ளானமை, கண்டி போதனா வைத்தியசாலையில் முஸ்லிம் பெண் அணிந்திருந்த ஹபாயா மற்றும் ஹிஜாபை அகற்றுமாறு அங்கு கடமையில் இருந்த தாதியினால் நிர்ப்பந்திக்கப்பட்டமையை குறிப்பிட்டுக் கூறலாம். இவ்வாறு இஸ்லாமோபியா அச்சத்தின் உச்சகட்ட தாக்குதலாக அளுத்கம வன்முறையைக் குறிப்பிடலாம்.

**முடிவுரை**

இன்று சர்வதேச ரீதியாக முஸ்லிம்களுக்கெதிரான வன்முறைகளுடன் தொடர்புபடுத்தி இஸ்லாமோபியா எனும் சிந்தனை காணப்படுகின்றது. இச்சிந்தனையானது சர்வதேசம் இஸ்லாம் மீது கொண்ட அச்சத்தின் வெளிப்பாடாகவே காணப்படுகின்றது. அதாவது இஸ்லாம் உலக நாடுகளில் வேகமாகப் பரவி வருகின்ற நிலையின் காரணமாக அதி தீவிரமாக இக்கருத்தியலின் தாக்கம் காணப்படுகின்றது. இதனை அடிப்படையாக வைத்தே இலங்கை போன்ற முஸ்லிம்களை சிறுபான்மையினராகக் கொண்ட நாடுகளிலும் இச்சிந்தனை பரவி வருகின்றது. அதாவது யுத்தத்திற்குப் பின்னரான இலங்கையை எடுத்து நோக்கும் போது அதிகமாக முஸ்லிம்களை மையப்படுத்தியதாக அமைந்த வன்முறைகளாகக் காணப்படுவது முஸ்லிம்களின் அடையாளத்தினை நசுக்குவதற்கும் மற்றும் முஸ்லிம் இனத்தின் எழுச்சியினை மழுங்கடிக்கச் செய்வதற்கும், இழந்து போன சர்வதேச நாடுகளின் ஒத்துழைப்பினையும் ஆதரவினையும் பெற்றுக் கொள்ளும் நோக்கிலும், முஸ்லிம்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறைகளை நியாயப்படுத்தும் நோக்கிலும் இலங்கையில் இஸ்லாமோபியா சிந்தனையின் தாக்கம் காணப்படுவதாக குற்றச் சாட்டுக்களை எழுச்சி பெற்று வரும் பௌத்த தேசியவாத இயக்கங்களான பொதுபல சேனா,

ராவண பலய, சிஹல உறுமய, ஜாதிக ஹெல உறுமய, தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் போன்ற அமைப்புக்கள் சுமத்தி விட்டமையே இலங்கையில் இஸ்லாமோபியா சிந்தனையின் பரவலாகக் குறிப்பிட முடியும்.

**உசாத்துணைகள்**


1. Aliff. SM, *Post-War Conflict in Sri Lanka: A Study Focusing on Violence against Sri Lankan Muslims and Buddhist Hegemony* , Second International Symposium – 2015, FIA, SEUSL.
2. Center for Policy Alternative,(2013), *Attack on places of Religious Warship in Post-War SriLanka*.www.cpalanka.org (Accessed on 15.06.2016 ).
3. Latheef Farook, (2014), *Muslims of Sri Lanka Under Siege*.
4. Jones, Robin Noel, Badone. (2015). *Sinhala Buddhist Nationalism and Islamophibia in Contemporary Sri Lanka.* Honor Thesis.
5. Rameez, A. (2015). *Aluthgama Violence: a reflection of Sinhala, Buddhist, Supermacism.* paper presented at Second International Symposiyum in SEUSL
6. திருமலை நவம். (2014. ஜுன்.29). *சிறுபான்மை சமூகத்திற்கு எதிரான வன்முறைகள் காலாகாலம் தொடர்கின்றன.* வீரகேசரிவார வெளியீடு. ப-06
7. யசி, ஆர். (2014. ஜுன்.21). *முஸ்லிம்கள் மீதானதாக்குதலுக்கு பொதுபலசேனா பொறுப்புக் கூறாது.* வீரகேசரி. ப-04.
8. அன்வர். (2014, ஜுலை). *இலங்கையிலும் இஸ்லாமோபியா.* உண்மைஉதயம். ப-46